சனவரி - 2023 ஆம் மாதத்திற்கான
சம்பளம் வழங்கும் அதிகாரம்
(Pay Authorization for the month of January- 2023)

பள்ளிக் கல்வித் துறை
தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

கடித எண்.430/பக5(1)/2023-2, நாள் 30.01.2023

அனுப்புநர்
திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர்கள், சென்னை – 01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

31/01/23

ஐயா,

பொருள்: பள்ளிக் கல்வி – தற்காலிகப் பணியிடங்கள் – 2008-2009 ஆம் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்ட அரசு /நகராட்சி /மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளுக்கு 600 பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டது - இப்பணியிடங்களுக்கு சனவரி-2023 ஆம் மாதத்திற்கு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization) வழங்குதல்-சார்பு.

பார்வை:
1. அரசாணை (நிலை)எண். 101, பள்ளிக் கல்வித் (இ1) துறை, நாள் 15.05.2008.
2. அரசாணை (1டி)எண்.297, பள்ளிக் கல்வித் (பக5(1) துறை, நாள் 24.04.2018.
3. அரசாணை (1டி)எண்.264, பள்ளிக் கல்வித் (பக5(1) துறை, நாள் 23.07.2019.
4. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க.எண். 022020/ எல்/இ3/2021, நாள் 05.01.2023.

--------------

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில், ஏனையவற்றோடு, 2008-09 ஆம் கல்வியாண்டில் 100 அரசு, ஊராட்சி ஒன்றிய, நகராட்சி மற்றும் மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 அரசு / நகராட்சி / மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தியும், உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் 100 பள்ளிகளுக்கு, பள்ளி ஒவ்வொன்றிற்கும் இரண்டு பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 200 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ரூ.5500-175-9000 என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக நிரப்பப்படும் நாள் முதல் ஒரு வருட காலத்திற்கு தோற்றுவித்தும், இவ்விரண்டு பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் ஒரு பணியிடத்தை 2008-09-ஆம் கல்வி ஆண்டிலும், மற்றொரு பணியிடத்தை 2009-10ஆம் கல்வி ஆண்டிலும் நிரப்ப அனுமதியளித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் 100 பள்ளிகளுக்கு பள்ளி ஒவ்வொன்றிற்கும் 5 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 500 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ரூ.6500-200-10500 என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக நிரப்பப்படும் நாள் முதல் ஒரு வருட காலத்திற்கு தோற்றுவித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

2. பார்வை இரண்டில் காணும் அரசாணையில், 2008-2009 ஆம் கல்வியாண்டில் நிலையுயர்த்தப்பட்ட உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட 600 தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.07.2018 முதல் 31.12.2020 வரையிலும், பார்வை மூன்றில் காணும் அரசாணையில் 912 தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.01.2019 முதல் 31.12.2021 வரையிலும், தொடர் நீட்டிப்பு செய்து ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

3. மேற்காணும் 600 தற்காலிகப் பணியிடங்களுக்கு தொடர் நீட்டிப்பு முடிவுற்ற நிலையில், இப்பணியிடங்களுக்கு 01.01.2021 முதல் 31.12.2023 வரை மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்க பள்ளிக் கல்வி ஆணையர் அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார். இப்பணியிடங்களுக்கு சனவரி-2023 ஆம் மாதத்திற்கு ஊதியம் பெறத்தக்க வகையில் ஊதியம் வழங்க ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக்கல்வி ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்குறிப்பிட்டுள்ள 600 தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.01.2021 முதல் 31.12.2023 வரை மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில், பார்வை ஒன்றில் காணும் அரசாணையின்படி ஒப்பளிப்பு செய்யப்பட்ட 600 (2008-09இல் தரம் உயர்த்தப்பட்ட உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட 100 பட்டதாரி ஆசிரியர் + 500 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்) தற்காலிகப் பணியிடங்களுக்கு சனவரி-2023 ஆம் மாதத்திற்கான ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான சனவரி-2023 ஆம் மாதத்திற்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா..எண்3392/கல்வி-II/2023, நாள் 24.01.2023 இல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது,

தங்கள் நம்பிக்கையுள்ள

30/1/23

அரசு முதன்மைச் செயலாளருக்காக

30/1/2023

**நகல்**

பள்ளிக்கல்வி ஆணையர், சென்னை-6.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.
நிதி(கல்வி-II)த் துறை , சென்னை-9.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

**கடித எண்.430/பக5(1)/2023 - 2, நாள் 30.01.2023 இன் இணைப்பு**

2008-09ஆம் கல்வியாண்டுகளில் தரம் உயர்த்தப்பட்ட அரசு / நகராட்சி / மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட 1512 தற்காலிக ஆசிரியர் பணியிடங்களில், 600 பணியிடங்களின் விவரங்கள்:-

| அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | |
|---|---|
| பட்டதாரி ஆசிரியர் | பழைய ஊதிய விகிதம் : ரூ.9,300-34,800 + 4600 தர ஊதியம்.<br>புதிய ஊதிய விகிதம் : நிலை-16, ரூ.36,400–1,15,700/- |
| முதுகலை பட்டதாரி ஆசிரியர் | பழைய ஊதிய விகிதம் : ரூ.9,300-34,800 + 4800 தர ஊதியம்.<br>புதிய ஊதிய விகிதம் : நிலை-18, ரூ.36,900 -1,16,600/- |

| பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்ட அரசாணை மற்றும் அனுமதிக்கப்பட்ட ஆண்டு | பணியிட விவரம் | கடைசியாக தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்ட அரசாணை மற்றும் காலம் |
|---|---|---|
| அரசாணை (நிலை) எண்.101, பள்ளிக்கல்வி, நாள்.15.05.2008. 2008-09 ஆம் ஆணடு | (I).100 பட்டதாரி ஆசிரியர்கள்<br>(II). 500 முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் | அரசாணை (1டி) எண்.297, பள்ளிக்கல்வி[பக5(1)] துறை, நாள்: 24.04.2018.<br>(01.07.2018 முதல் 31.12.2020 வரை) |
| மொத்த பணியிடங்கள் | 600 | |

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

இவ்வலுவலக ந.க.எண்: 022020/எல்/இ3/2021 நாள்: .01.2023

(நகல்) தகவலுக்காகவும் தக்க நடவடிக்கையின் பொருட்டும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்படுகிறது.

பெறுநர்:-
அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்

Joint Director (NSS),
Commissionerate of School Education,
Chennai-600 006.